சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து மாவட்டத் தலைநகரங்களில் கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!

மிசா கொடுமைகளை அனுபவித்த கழகத்தலைவர் முன்னாள் முதலமைச்சர் தளபதி அவர்களின் தியாகத்தை சட்டமன்றத்தில் கொச்சைப்படுத்திய முதலமைச்சர் ஜோசப்விஜயை கண்டித்து திருவாரூர் மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் . சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜயின் ஆணவ அநாகரிக பேச்சை கண்டித்து நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில் நாமக்கல் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள பூங்கா சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே .ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி ஆகியோ தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜயின் ஆணவ பேச்சை கண்டித்து ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கு.முத்துச்சாமி கண்டன உரையாற்றினார். ஆர்பாட்டத்தில் கழக துணை பொதுசெயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, வி.சி.சந்திரகுமார், கள்ளிப்பட்டி மணி, மா.க.ராதாகிருஷ்ணன், மாவட்ட கழக நிர்வாகிகள் குமார் கேமருகேஷ், ஆ. செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ்.ஜமாரசாமி, மாநகரக் கழக செயலாளர் மு.சுப்ரமணியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஏ.வி.வெங்கடாசலம், கே.பிசாமி, எம்.சிவபாலன், சிறுவலூர் எஸ்.ஏ.முருகன்,கேபிள் சந்திரசேகர், க.குணசேகரன், ப.செங்கோடையன், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெ. திருவாசகம், நகர்மன்ற தலைவர்கள் ஜானகிராமசாமி, சிந்தூரி இளங்கோவன், தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு ப.இளைய கோபால், பவானி கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உறம்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் அவதூறு பேசிய முதலமைச்சர் விஜயைக் கண்டித்து தஞ்சையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழனிவேல், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், கழக சட்டத்திட்ட திருத்த குழு தலைவர் கு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் கோவி.செழியன், ஆர்.வைத்தியலிங்கம், ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

முதல்வர் விஜயை கண்டித்து அரியலூர் பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் கழக சட்டத்திட்ட திருத்துகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க. கண்ணன், து.அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு. நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட தி. மு. க. சார்பில் தமிழக முதலமைச்சரைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கே. என். அருண் நேரு, எம். பி., மாநில நிர்வாகிகள் பா. துரைசாமி, இரா. ப. பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், நகரச் செயலாளர். எம்.பிரபாகரன் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதல்வர் விஜய் அவர்களின் ஆணவ, அநாகரிக பேச்சை கண்டித்தும், கோவை மாவட்ட திமுக சார்பில், கோவை தெற்கு தாலுகா அலுவலகம் அருகில், தி.மு.க. மாநில தீர்மானக் குழுச் செயலாளர் நா. கார்த்திக், மாநகர் மாவட்டத் தி.மு.க. பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன்,வடக்கு மாவட்டச் செயலாளர் தொ. அ. ரவி,தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில், கோவை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்பி., கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து திருப்பத்தூர் மாவட்ட திமுக சார்பில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி கண்டன உரை நிகழ்த்தினார். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்ட பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், மு.மாவட்ட பொறுப்பாளர் ம.முத்தமிழ்ச்செல்வி, அ.நல்லதம்பி, மு.அமைச்சர் நிலோபர் கபில், மாநில தொண்டரணி து.செயலாளர் பி.எம்.முனிவேல் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டனங்களை தெரிவித்தார்கள்.

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து திருப்பூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பூரில் அண்ணா பெரியார் சிலை அருகில் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் தலைமையில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நா.ஈளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.தெயபாரம்கிருஷ்ணன் (மடத்துக்குளம்), மு.ஜெயக்குமார் (உடுமலைப்பேட்டை.), திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேஜ மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்றனர்.

இந்திய வரலாற்றில் தமிழகத்தை தலை குனிய வைத்த தற்குறி முதலமைச்சர் விஜயை கண்டித்து கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் ஆணைப்படி ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திமுக சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் , தலைமையில், மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் முன்னிலையில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தற்குறி அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், கிருஷ்ணமூர்த்தி, மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், மேயர் சத்யா, மாவட்ட அவைத் தலைவர்கள் நாகராஜ், யுவராஜ் , மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் பே. வெங்கடேசன் , அரியப்பன் மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மகளிர் என நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.

நாகை மாவட்டம் நாகையில் நிர்வாக திறமையற்ற சோபா மாடல் முதலமைச்சர் விஜய் சட்டமன்றத்தில் பேசிய ஆணவப் பேச்சைக் கண்டித்து நாகை புதிய பேருந்து நிலையம் அவுரி திடலில் நாகை மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் தலைமையில் நடைபெற்றது. உடன் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதத்தினம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப. கோவிந்தராஜன், இல.பிரகாதன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளன.